Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 984 10 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Dy.Surgeon — 944 4 268784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 944 5 401793
Dr Shanthi R — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salma R — General Physician — 877 80 87742
Dr Praveena E — Sr ENT Surgeon — 994 4 100443

ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகளை மியான்மருக்குத் திருப்பி அனுப்ப மலேசியா திட்டம்



சென்னை – 25 நவம்பர், 2026 புதிய கட்டமாக 6,500க்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகளை மியான்மருக்குத் திருப்பி அனுப்ப மலேசியா நடவடிக்கை எடுக்கும் என்று அந்நாட்டுப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்தார்.

மியான்மரின் பாதுகாப்புப் படைகள் ரோஹிங்கியா சிறுபான்மையினருக்கு எதிராக இனப்படுகொலை செய்ததாக ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்த ஐந்து நாள்களுக்குப் பிறகு, செவ்வாய்க்கிழமை இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மியான்மரிலிருந்து வெளியேறியவர்களுக்கு மலேசியா நீண்டகாலமாகப் பாதுகாப்பு அளித்து வந்துள்ளது. ஆனால், அதிகரித்து வரும் அகதிகளின் எண்ணிக்கையால், அவர்களுக்கு அடைக்கலம் அளிப்பது நிதிச் சுமையாகவும் பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும் மாறிவிட்டதாகக் கூறி மலேசியா தற்போது அதிருப்தி அடைந்துள்ளது.

செப்டம்பர் மாத இறுதியில், சுமார் 1,500 புலம்பெயர்ந்தோர் போரால் பாதிக்கப்பட்ட மியான்மருக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த நடவடிக்கை குறித்து மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

மலேசிய நாடாளுமன்றத்தில் பேசிய அன்வர், டிசம்பர் 6 மற்றும் 7ஆம் தேதிகளில் மூன்று கடற்படைக் கப்பல்கள் மூலம் மியான்மரைச் சேர்ந்த 1,500 பேர் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றார். "டிசம்பர் மாதத்தில், மியான்மர் அரசின் செலவில் விமானங்கள் மூலம் 5,303 பேர் திருப்பி அழைத்துச் செல்லப்படுவார்கள்" என்றும் அவர் கூறினார்.

ஆகஸ்ட் மாத நிலவரப்படி, மலேசியாவில் ஐ.நா. அகதிகள் ஆணையத்தில் 2,25,740 அகதிகளும் புகலிடம் கோரியவர்களும் பதிவு செய்திருந்தனர். அவர்களில் சுமார் 90 சதவீதம் பேர் மியான்மரைச் சேர்ந்தவர்கள் என்று அந்த அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

மியான்மருக்குள்ளும் வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்த அகதிகள் பாதுகாப்பாகவும், தன்னார்வத்துடனும், கண்ணியத்துடனும் திரும்புவதை அந்நாட்டு அதிகாரிகள் அனுமதித்து அதற்கு உதவ வேண்டும் என்று ஐ.நா.வின் உயரிய நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது.